24108

## சுருக்கம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை – மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகங்களில் ஏற்கனவே இயங்கிவரும் சிற்றுண்டி விடுதிக்கு பதிலாக இரயில் நிலையங்களில் உள்ள சிற்றுண்டி விடுதிகளைப்போல – புதிய சிற்றுண்டி நிலையங்கள் அமைப்பது – செயலர் தலைமையில் 14.02.2015 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது – கொள்கை முடிவு எடுக்கப்பட்டது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எச்.2) துறை

அரசாணை (நிலை) எண்.93 நாள் 25.03.2015
ஜய, பங்குனி 11
திருவள்ளுவர் ஆண்டு 2046

30 MAR 2015

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.2160, பொதுப்பணித் துறை, நாள்.03.11.1987.
2. அரசாணை (நிலை) எண்.59, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.20.03.2003.
3. அரசுக் கடித எண் 45278/எச்2/2014–5, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 09.02.2015.

---

**ஆணை:**

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் உள்ளிட்ட அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள சிற்றுண்டி விடுதிகளின் தரம் குறித்து பல்வேறு புகார்கள் காலம்காலமாக அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் மருத்துவமனைகளில் சுகாதாரமற்ற முறையில் இச்சிற்றுண்டிசாலைகள் உணவுகளைத் தயாரித்து அளித்துவருவதும், அவை சுகாதாரமற்ற முறையில் பராமரிக்கப்பட்டுவருவதும் முக்கியமானதாக அறியவந்துள்ளன. இதுகுறித்த நேரடி ஆய்வுகள், புகார்கள் உண்மைத் தன்மையுடையவை என்று புலப்படுத்தி உள்ளன. அரசு இது தொடர்பாக கவனமுடன் ஆய்வுக்ளை மேற்கொண்டது. அவ்வாய்வுகளின் அடிப்படையில் இதுகுறித்து பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:–

(1) அனைத்து அரசு மருத்துவ நிறுவன வளாகங்களிலும் உள்நோயாளி / புறநோயாளிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சிற்றுண்டி மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.

(2) "தரம், சரியான விலை ஆகியவற்றை கணக்கில் கொண்டு இரயில்வே நிலைய சிற்றுண்டி மையங்கள் போன்று அரசு மருத்துவமனைகள், கல்லூரி மருத்துவமனைகள், இந்திய மருத்துவ மருத்துவமனைகள் ஆகியவற்றில் இரயில்வே நிலைய சிற்றுண்டி நிலையங்கள் போல தரமான சிற்றுண்டி மையம் அமைக்க, அந்தந்த துறை இயக்குநரால் அங்கீகரிக்கப்படும் சிற்றுண்டி மையங்கள் மட்டுமே இனிமேல் அனைத்து மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், இந்திய மருத்துவ மருத்துவமனைகள் ஆகியவற்றில் செயல்பட அனுமதிக்கப்படும்.

Scanned by CamScanner

(3) அந்த சிற்றுண்டி மையம் அமைக்க பொது மக்களிடமிருந்து துறை இயக்குநரால் ஒப்பந்த புள்ளி கோரப்படும். அந்த ஒப்பந்த புள்ளிகள் நடைமுறையிலுள்ள சட்ட விதிமுறைகளின்படி அரசால் இறுதி செய்யப்படும்.

(4) அந்த சிற்றுண்டி விடுதிகள் சுத்தமாக பராமரிக்கப்படுவதோடு, குறைந்த விலையில் தரமான உணவு வழங்கப்படும். உணவு வகைகள் மற்றும் அவைகளின் விலைப்பட்டியல் அனைவருக்கும் தெரியும் வண்ணம் வைக்கப்படும்.

(5) தேவை எனில் மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கென மருத்துவக் கல்லூரிகளில் தனியாக சிற்றுண்டி மையம் மேற்கண்ட நிபந்தனைகளின்படி அமைக்கப்படும்.

(6) அரசு துறைகளில் நேரடியாக நடத்தப்பட்டு வரும் சிற்றுண்டி நிலையங்கள் நீங்கலாக அரசு மருத்துவமனைகளில் தற்போது இயங்கிவரும் இதர நபர்களால் / நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் அனைத்து சிற்றுண்டி நிலையங்களுக்கும் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டு அவை காலி செய்யப்பட வேண்டும். அவர்களின் ஒப்பந்த கால இருப்பின், அந்த காலம் வரையிலோ அல்லது 3 மாத கால அவகாச முடிவிலோ அவர்கள் நடத்தி வரும் சிற்றுண்டி நிலையங்கள் காலி செய்யப்பட வேண்டும்."

2. மேற்கண்ட ஆணைகளின்படி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மற்றும் மருத்துவம் ஊரக நலப் பணிகள் இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை–10
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை–6.
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை–6.

நகல்
சிறப்பு நேர்முக உதவியாளர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலரின் தனிச் செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9.
இருப்புகோ / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. சந்திரசேகரன்
பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner